உ

சிவமயம்



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# நினைவு சுடர் மாலை

11.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்னையைப் போலொரு தெய்வமுண்டோ



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும்,
வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# நினைவு சுடர் மாலை

11.10.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்னையின் பாதங்களிற்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

எமது இல்லத்தின் குலவிளக்காகத் திகழ்ந்து எம்மைப் பெற்று வளர்த்தெடுத்து நல்லறிவூட்டி, நல்வழிப்படுத்தி அயராது உழைத்து நாம் மேன்மை பெற உற்ற வழி காட்டி உறுதுணையாக எம்மையெல்லாம் மாண்பு பெற்று சிறப்போடு வாழவைத்து விண்ணுலகேகிய எம் அன்புத் தெய்வத்தின் பொன்னடிகளிற்கு இம் மலரினை காணிக்கையாக சமர்ப்பணம் செய்து வணங்குகின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



வையகத்தில்
15-12-1919

வானகத்தில்
11-09-2010

அமரர்

# திருவாட்டி. வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

சீர்பெருகு விகிர்தி ஆண்டு சிறப்புயர் ஆவணியாம்
பார்பெருகு பூர்வபக்க திருதியையில் - பேர்புகழ்
வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை வரமே வேண்டி
விண்ணுலகை நல்கினரே காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத துயரம் போம் - நல்ல
குணமலிகை மாமலைக் கோபுரத்தே வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

கடையவனேனைக் கருணையினாற் கலந்
நாண்டு கொண்ட
விடையவனே விட்டுதி கண்டாய் விறல்
வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.

# திருவிசைப்பா

இடர் கொடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறித் தெழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி!
அடல் விடைப்பாக! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்

# திருப்புகழ்

கருவிலுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து - அதனாலே
கரிய குழல் மாதர் தங்கள் அடிசுவடு மார் புதைந்து
கவலை பெரிதாக நொந்து - மிகவாடி
அரகரசிவாய வென்று தினமு நினையாமல் நின்று
அனுசமய நீதியொன்றும் - அறியாமல்
அசன மிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அனுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபட மேவளர்ந்த பெரிய பெரு மாளரங்க
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற பெருமாளே!

# வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் வள்ளிப்பிள்ளை அவர்கள் விரும்பிப் படிக்கும்

# இராமலிங்க சுவாமி பாடல்

ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறுநினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்.

மருவுபொண்ணாசையை மறக்கவேண்டு முனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தன்முகத்துய்ய மணியுண் முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதியந்தாதி



### காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிகநிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாந்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

## சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கை யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே. 02

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு(து)
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 03

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே. 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 08

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி வள்ளிப்பிள்ளை வன்னியசிங்கம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது உளங்கொள உள்ளத்திலிருந்து மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்க எம்மை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் வழிபடுமென்றே"! என்ற பொன்சேர் மொழியை நினைத்தும் விக்கினந் தீர்த்திடும் விக்கினேஸ்வரர் கோயிலையும் கலிதுடை கந்தக் கடவுளாம் முருகன் கோயிலையும் அன்புக் கரந்தெளிக்கும் சிவகாமி சுந்தரியாம் நாச்சியம்மன் ஆலயத்தையும், இன்னும் பல இணைதலங்களையும், கொண்டு நீர்வளமும், செல்வச் செழிப்பும் ஒருங்கே அமைந்தது கைதடி என்னும் சிறிய கிராமமாகும்.

அதிகாலை வேளை ஆலயங்கள் தோறும் உள்ள மணிகள் ஓசையெல்லாம் ஓம் ஓம் எனும் ஓங்காரத்தை இசைத்து மக்களை விழிப்படையச் செய்கிறது. இவ் இனிய ஓசையை தினமும் கேட்கும் இவ்வூர் மாந்தர் சிவ சிந்தனையோடும், சுறுசுறுப்பாகவும் அன்றைய கருமங்களில் ஈடுபடுவர்.

இப் பெருமை பெற்ற பதியிலே மிகுந்த இறை பக்தியோடும், கொடை வள்ளல்களாகவும் வாழ்ந்தவர்களே வல்லிபுரம் சேதுப்பிள்ளை தம்பதிகளாவர். இவர்கள் இப் பிரதேசத்தில் பெரு நிலப் பரப்பினையுடையவர்களாக ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விவசாயத்தில் விற்பன்னர்களாக விளங்கி வாழ்ந்துள்ளனர். இவர்களது நன்னெறிப் பயனாய் உதித்த முத்துக்களே அமரர் வள்ளிப்பிள்ளை, முத்துக்குமாரசாமி ஆகிய பிள்ளைச் செல்வங் களாவர். இவர்களைப் பெற்றோர்கள் நல்லறிவூட்டி நலமானவர் களாகவும், ஒழுக்கமானவர்களாகவும், பண்பாளர்களாகவும் திகழ வைத்துள்ளனர்.

இவர்களில் முதல் முதலாக உதித்தவரே அமரரான வள்ளிப்பிள்ளை என்பவராவர். இவருக்குப் பெற்றோர்கள் ஆரம்பக் கல்வியை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் ஊட்டினர். இதன் பின்பு தந்தை தாயாரது விவசாய நடவடிக்கை களுக்கு உறுதுணையாக இருந்து தனது அன்புச் சகோதரனை வளர்த்தெடுத்து கல்வி அறிவுமிக்கவராக மிளிர வைத்தார். இவரது அழகிய வதனம் ஈர்ந்தெடுத்ததனால் இவரது பெற்றோருடன் சிறிய தந்தையார்களாகிய அமரர்களான வேலுப்பிள்ளை, கந்தையாவும் இவரை வளர்ப்புப் பிள்ளைகளாக பாசத்தொட்டிலிலிட்டு சிறப்பாக வளர்த் தெடுத்தனர்.

இவ்வாறாக அமரர் வள்ளிப்பிள்ளை காலச் சக்கரத்தில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து அழகிய கொடியானாள். கொடி வளர கொம்பு வேண்டும் என்பதற்காய் அவ்வூர் அமரர்களான அப்பாபிள்ளை முத்தாச்சிப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது புதல்வனும் கொப்ரன் குறூப் கொப்ரனில் உதவி வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய வன்னியசிங்கம் என்பவரை பெற்றோரும் மற்றோரும் மங்கள நாண் பூட்டி அன்னாரது பதினெட்டாவது வயதில் இல்லறமென்னும் பாசப்பிணைப்பில் இணைத்தனர். சுவாசங்கள் இரண்டென இருந்தும் நேசங்கள் ஒன்றென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளங்களில் ஓடும் செங்குருதி போல இருவரும் தமது வாழ்க்கையை ஒரே பாதையில் இறைபக்தியுடன் இனிது வாழ்ந்து வரலாயினர்.

**"மங்கலம் என்பது மனை மாட்சி மற்று அதன்
நன்கலன் நன்மக்கட் பேறு"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க பத்து குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இவர்களில் ஆறு ஆண்களும், நான்கு பெண்களும் ஆவர். கைதடி இணுங்கித் தோட்டக் கந்தனின் அருளால் ஆறு ஆண்குழந்தைகள் பிறந்தமையால் "ஆறுமுக" எனும் கந்தனின் ஆரம்பப் பெயரைச் சூட்டியும், பெண் குழந்தைகளுக்கு அம்மனின் பெயரைச் சூட்டியும் மகிழ்ந்தனர்.

இவர்களில் மூத்த புதல்வராக உதித்தவரே ஆறுமுகவடிவேல் ஆவர். இவர் கல்வியறிவு பெற்று ஆசிரியராக கடமை புரிந்து திருமணப் பருவம் எய்தியதும் வல்வெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அழகம்மா தம்பதியினரின் இரண்டாவது புத்திரி யோகீஸ்வரி (எழுதுவினைஞர்)யைத் திருமணம் செய்து செந்தூரன், சுதர்சனா ஆகிய செல்வக் குழந்தைகளைப் பெற்று இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். பிள்ளைகள் தொழில், திருமணம் காரணமாக லண்டனில் வாழ்கின்றனர்.

இரண்டாவது புத்திரன் ஆறுமுகநாதன் தனியார் நிறுவனத்தில் களஞ்சிய மேற்பார்வையாளராகக் கடமை புரிந்து கைதடியைச் சேர்ந்த கந்தையா தெய்வநாயகி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி புவனேஸ்வரி (ஆசிரியை) என்பவரைத் திருமணம் செய்து நிரஞ்சனா, சஜந்தன் ஆகிய பிள்ளைகளுடன் கைதடியில் வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த புதல்வன் ஆறுமுகசுவாமி குரும்பசிட்டியைச் சேர்ந்த இராசையா அன்னலட்சுமி தம்பதியினரின் புதல்வி சற்குனேஸ்வரியை (ஆசிரியை) இல்லாளாக்கி கஜந்தினி, கஜந்தன் ஆகிய செல்வங்களுடன் ஜேர்மனியில் சிறப்புடன் வாழ்கின்றனர். இவர் தாயாரின் சுகயீனம் அறிந்து கடல் கடந்து வந்து செய்ய வேண்டிய கருமங்களில் ஈடுபட்டார்.

அடுத்தவராக குடும்பத்தின் சிரேஸ்ட புத்திரியாகப் பிறந்தவர் சரஸ்வதிதேவி என்பவராவர். இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நாகம்மா அவர்களின் கனிஸ்ட புத்திரன் நடராசாவை வாழ்க்கைத் துணைவராகப் பெற்று நிரோஜினி, பிரதீபன், சுதாஜினி, பார்த்தீபன்(அமரர்), ராஜினி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று வாழ்க்கை நடாத்தும் பொழுது திடீரென இவரது கணவர் மாரடைப்புக் காரணமாக இறந்தார். இருந்தும் இவர் தனது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இனிது நிறைவேற்றி அவர்கள் அனைவரும் திருமணம் முடித்து வெளிநாடுகளில் சீரும் சிறப்புடனும் வாழ்கின்றனர். சரஸ்வதிதேவி அவர்கள் தற்பொழுது தனது சகோதரியுடன் திருநெல்வேலியில் வாழ்ந்து வருகின்றார்.

ஐந்தாவது புதல்வியாகிய தவமணி என்பவர் தனது தாயினை கடந்த 11/2 வருடங்களாக அன்பாகவும், அரவணைப் புடனும் பரமாரித்து வந்தார். இவர் வளலாலையைச் சேர்ந்த இராசையா இராசமணி தம்பதியினரின் ஏக புதல்வர் வாமதேவா என்பவரைத் திருமணம் செய்து இராகுலன், வைஷ்ணவி ஆகிய பிள்ளைகளுடன் திருநெல்வேலியில் வசித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் ஆறுமுகஜோதி குடும்பத்தினருக்கு தோள் கொடுப்பதில் முதன்மையானவர். இவர் விடத்தல்பளையைச் சேர்ந்த பிரபல விவசாயி இளையதம்பி சரஸ்வதி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி பராசக்தி (ஆசிரியை)யை இல்லாளாக்கி திருகோணமலையில் வாழ்ந்து வருகின்றனர். ஆறுமுகஜோதி அவர்கள் நீண்ட காலமாக சவூதி அரேபியாவில் கடமையாற்றி தற்பொழுது திருகோணமலையில் ஐக்கிய நாட்டு உலக உணவுத்திட்டத்தில் கடமை புரிகின்றார்.

ஏழாவது புதல்வியாக உதித்தவரே அமரர் யோகீஸ்வரி ஆவர். இவர் எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், மற்றவர் களுக்கு உதவி செய்வதிலும் முதன்மையானவர். இவர் பிரதம இலிகிதராக கைதடி கமநலசேவையில் கடமையாற்றி வரும் பொழுது கொடிய பிணியின் காரணமாக அமரரானார். எப்பிள்ளை யிடத்தும் ஒரே தன்மையாய் ஊற்றெடுத்துப்பாயும் அவ்வன்னை யின் உள்ளத்தை தெய்வத்துக்கே உவமையாகக் கூறலாம் என்பதற்கிணங்க தனது இறுதி மூச்சுவரை தனது தாயாரை நன்கு கவனித்து வந்தார். இவர் கைதடி மேற்கைச் சேர்ந்த அமரர்களான சுப்பிரமணியம், தங்கம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன் செல்வராசா (கிராமஅலுவலர்)வை வாழ்க்கைத் துணைவராகக் கொண்டார்.

அடுத்த கனிஷ்ட புதல்வியாகிய சாந்தினி (ஆசிரியை) நயினாதீவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நாகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன் பாலராஜேஸ்வரன் (பொறியியலாளர்) என்பவரைக் கரம்பிடித்து ஏகபுத்திரன் கோபியுடன் பொட்ஸ்சவானாவில் நல்வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார். இவர் அன்னையின் இறுதி யாத்திரைக்கு முன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் கடந்து வந்து அத் தெய்வத்திற்கு ஆற்ற வேண்டிய கருமங்கள் அனைத்தையும் மனத் திருப்தியுடன் நிறைவேற்றினார்.

அடுத்து ஆறுமுகலிங்கம் இவர் தாயின் சுகயீனம் அறிந்து கனடாவிலிருந்து விரைந்து தாய்க்கு கடைசி நேரத்தில் பால் பருக்கி அவருக்கு செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்தார். இவர் கோண்டாவிலைச் சேர்ந்த இரத்தினம் இரத்தினம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி சாந்தினியைத் திருமணம் செய்து அபிதா என்னும் பெண் செல்வத்துடன் கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

கனிஷ்ட புதல்வன் ஆறுமுகசீலன் சுவிற்சலாந்தில் வாழ்கின்றார். இவர் நீர்வேலியைச் சேர்ந்த அருளம்பலம் சகுந்தலாதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி நிர்மலலவியைத் திருமணம் செய்து வாழ்கின்றார்.

இவ்வாறு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் இனிது வாழ்ந்து வரும் வேளையில் 11.09.2010 சனிக்கிழமை காலை 05.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உள்ளக் குமுறல்கள்

அன்பின் தெய்வமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வில் வழிகாட்டியாய் திகழ்ந்த உங்கட்கு
காரிருள் சூழ்ந்த நள்ளிரவு வேளையில் நாம் தூங்கு
முன் ஆகாரம் தந்து விட்டு உறங்கினோமே!
அதிகால வேளையில் ஆகாரம் தர எழுப்பிய
போது நீங்கள் நிரந்தரமாக உறங்கிய
நிலையைக் கண்டு நாம் கண்களில் நீர் சொரிய
உறைந்து நின்றோம். இனி நாம் யாரை
அம்மாவென அழைப்பது? ஐயா இறந்தும் பாரிய
பொறுப்பைச் சுமந்து எங்கள்
அனைவரினது நற்கருமங்களையும் செய்து வைத்தீர்களே!
எங்கள் தேவைகளை மனம் கோணாது
நிறைவு செய்து வாழவைத்த தெய்வமே!
நாம் உங்கட்கு செய்யும் கைமாறு தான் என்ன?

நீங்கள் படுக்கையில் இருந்த பொழுது உங்கள்
தேவைகளைக் கவனித்தோம். நேரம் தவறாது
மருத்துவரின் கூற்றுக்கிணங்க மருந்து, ஆகாரம்
அனைத்தையும் ஏனைய சகோதரர்களுடன்
கடல் கடந்து வந்தும் செவ்வனே செய்தோம்.
காலன் யாரைத் தான் விடப்போகின்றான்?
எங்கள் அன்புத் தெய்வத்தை இழந்து ஒன்றும் புரியாமல்
கலங்கி கண்ணீர் வடிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாமி எங்கே?

அன்போடு என்றும் எம்மை ஆதரித்து இனிய கதை கூறி வந்தீர்களே மாமி! இனி நாம் யாரை மாமி என அழைப்பது? வீட்டிற்கு வந்ததும் எம்மை வரவேற்று இனிய பண்டங்கள் தந்து குசலம் விசாரித்தீர்கள் உங்கள் இரகசியம் அனைத்தையும் வேற்றுப் பிரிவின்றி எங்களுடன் பகிர்வீர்கள் வீட்டில் நிகழும் வைபவங்களில் எங்களுக்கு முக்கிய பங்கைத் தருவீர்கள் அனைவருக்கும் பெருமையுடன் எங்களை அறிமுகம் செய்வீர்கள். திருவிழாக் காலங்களில் எங்கட்கு அறுசுவை உணவளித்து இன்முகம் காட்டி நிற்பீர்கள். இனி அம்முகத்தை நாம் எப்போது காண்போமோ......?

***உங்கள் நினைவலைகளுடன் விளிவழியே நீர் கசிய ஏக்கத்துடன் தவிக்கும் மருமக்கள்.***

# நல்ல மாமி

நல்ல மாமி என்று மருமக்கள் எனை அழைத்தாலும்
நல்லமாமி நீங்கள்தான் எனக்கு
இல்லறத்தில் நாமிருவரும் இணைந்தபொழுது
அல்லலின்றி அருகேயிருந்து அரிய கதைகள் சொல்லி
செல்லமாக மருமகளே என்று அழைத்து
மெல்லவாக இரகசியங்கள் பல எனக்குச் சொல்லி
எல்லாம் நன்றாகவே அமையும் என்றீர்களே
இல்லாமல் போய்விட்டீர்களே மாமி!

மூக்குத்தி மூக்கில் மின்ன புருவத்தை உயர்த்திச் சிரித்து
வாக்குகள் பல சொல்லிச் சொல்லி இருந்தீர்கள்
பார்க்கு முன்னே பறந்து போய்விட்டீர்களே மாமி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கத்துடன் நாமிருக்க எங்கே பறந்து சென்றீர்கள்?
தீர்க்க யார் இருக்கிறார்கள் இத்துயரை எமக்கு?
ஆர்க்கும் கிடைக்காத அருஞ்செல்வங்களைப் பெற்று
ஓர் செல்வம் எனக்களித்தீர்கள் மாமி நீங்கள்
நீர்மட்டும் இன்றில்லையே நல்ல மாமியே!

பெற்ற மகள் புகழுடம் பெய்திய பொழுது
உற்றதுணையில்லையென்று ஓலமிட்டீர்களே மாமி!
குற்றமில்லையென்று மகளுடன் குறுநடை கொண்டீரோ?
ஒற்றுமை சொல்லி ஒழுங்காக உலகெய்தினாலும்
ஏற்றமுடன் இன்றும் நல்ல மாமியே நீங்கள் எனக்கு
சாற்றவும் முடியவில்லை மாமி உங்களின் இழப்பை
கற்றமக்கள் மருமக்களை ஆறுமுகன் பெற்றுத் தந்தாலும்
உற்ற துணை தேடி ஓடினீர்களோ மாமி!

எம்குறைதீர்க்க இணுங்கித் தோட்ட முருகனுக்குப் பொட்டுத்தாலி
"வம்சம் தா" என்று "நேர்த்தி வைத்தேன்" என்றீர்களே மாமி
எம்விதி வசம் உங்களின் ஆசை தீரவில்லை நல்லமாமி
தம்தம் கடமைகளைச் செய்யுங்கள் என்று
தவிக்கவிட்டுத் தனியே சென்றீர்களே நல்லமாமி!
தான தருமங்கள் தக்கபடி செய்தீர்கள் மாமி!
தக்கபடி மக்கள் தம்முன்னே உங்கள் நல்ல
தருமம் பலிக்க உங்கள் உயிர் பிரிந்ததும்
தருமம்தான் நல்லமாமியே!

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
நானுமிட்ட தீ மூள்க மூள்கவே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் சோதி மகன் தீ மூட்ட
பின்னையேன் இருப்பான் என்று சோதியுடன்
நன்றாகக் கலந்தீர்களோ நல்ல மாமி!
இன்னும் எப்பொழுது உமை நாம் காண்பது?

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
வேலவன் துணையுடன் வாழ்ந்தீர்கள் மாமி!
ஓலமிட்டு மக்கள் மருமக்கள் பேரர் பூட்டர்
காலம் எல்லாம் அழுது புலம்ப
ஞாலத்தில் ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
தலத்தில் மாண்டார் வருவாரோ என்று
ஓலமிடாதீர் நீரும் உமக்கென்ன என்று இரும் என்று
காலமெல்லாம் கண்ணீர் விடக் காணாமற்
போனீர்களோ நல்ல மாமி!

அந்திம காலத்தில் நாங்கள் உங்களிடம் வந்து
இந்த நேரத்தில் "என்ன நடக்குது மாமி" என்று கேட்க
"இதோ போகத்தான் ஆயத்தம்" என்றீர்களே!
அதேபோல் போய்விட்டீர்களே நல்ல மாமியே!
அந்தோ பரிதாபம்! என்று யாரும் சொல்லாமல்
நித்தமும் மக்களின் அன்பான தாலாட்டுடன்
இத்தனை காலமும் இருந்து விட்டுச் சென்றீர்களே!
அத்தன் உங்களின் ஆத்மசாந்திக்கு
அருள் புரியட்டும் நல்லமாமியே!

**ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*மருமகள்:*

*திருமதி. ப. ஆறுமுகஜோதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பார்தனில் வந்து உதித்து
பவ்வியமாய் கதைகள் சொல்லி
பண்போடும். பாசத்தோடும்உறவாடி
பறித்தானோ காலன் உன் புன்சிரிப்பை
கள்ளம் கபடமற்ற மனமும்
கலந்திடா நயவஞ்சகமும்
கற்பகதரு விருட்சமாக
காற்றினில் பறந்தது ஏன்?

## பாசம் நிறைந்த அம்மம்மா

அன்புடன் அம்மம்மா என நாம் அழைத்தவுடன்
என் மூத்தவளின் பிள்ளைகள் என எமை அன்பாக
அரவணைத்த அந்த அன்புக் கைகள் எங்கே?

அம்மம்மா சுயநினைவிழந்து கொண்டு போகின்றா என்ற
செய்தி கேட்டதும் கவலையுடன் தொலைபேசி எடுத்தேன்.
ஆனால் நீங்கள் என்னுடன் சுயநினைவுடன் பேசிய
வார்த்தைகள் இன்றும் என் மனதில்

ஊர் வந்து உன்பூட்டி இவள்தான் என
என் மகளுக்கு காட்ட வேண்டுமென
தினமும் இறைவனிடம் வேண்டி நின்றேன்
இனி என் மகளுக்கு பூட்டியென யாரைத் தான் காட்டுவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வருடம் என்னுடன் இருந்து நான் வளர்த்த
பேர்த்தி என இறுமாப்புடன் சொல்லி வந்தீர்கள்
இன்று எட்டாத் தூரத்திற்கு எமை ஏங்க விட்டு
நீங்கள் எங்குதான் சென்றீர்கள் அம்மம்மா?

**உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.**

***பேர்த்தி :- ராஜினி***

# பேரன் கோபியின் புலம்பல்

கள்ளமற்ற உள்ளத்துடனும்
கணீரென்ற குரலுடனும்
கலகலப்புடனே பழகிடும் சுபாவத்துடனும்
கண்ணியமாய் வாழ்ந்த - எங்கள்
கனிவான அம்மம்மாவே!
குறையாத சிற்பமாய் எங்கள் மனதில்
நிற்கிறது - உங்கள் உருவம்
கண்முன் தோன்றி மறைகிறது உங்கள் - புன்னகை
இனி உங்களைக் காணுவது எப்போது?
காணும், இனி இவ்வுலக வாழ்க்கை என்று,
கடவுளிடம் சென்றுவிட்டீர்களோ? அம்மம்மா..........
கடல் கடந்து வாழ்வதால்
கடமைகளில் பங்கேற்க முடியாமல்
தவிக்கிறேன் - எனினும்...................
அம்மம்மா........... அம்மம்மா............
கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்
உங்கள் ஆத்மாசாந்திக்காக

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றவர் மதிப்பைப் பெற சில யோசனைகள்

- இனிமையற்ற அல்லது எதிர்மறையான வார்த்தைகளை தவிர்த்தல்.
- பொறுமையுடன் அணுகுதல்.
- சேவை மனப்பான்மை.
- கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுதல்.
- உங்களைப் பாதிக்கும் விஷயங்களில் அதிக கவனம் செலுத்துக.
- பிரதிபலன் பாராமல் நேசிப்பது.
- மற்றவர் மீது நம்பிக்கை வைத்தல்.
- மற்றவர்களைப் புரிந்துகொள்ளுங்கள்.
- மற்றவர்களை மனம் திறந்து பாராட்டுங்கள்.
- காயப்படுத்துபவரைக் காயப்படுத்தாதீர்கள்.
- தவறுகளுக்கு வெளிப்படையாக மன்னிப்பு கோருங்கள்.

## உலகில் உள்ளது

- ஒரே மதம் - அதுவே அன்பெனும் மதம்
- ஒரே ஜாதி - அதுவே மானிட ஜாதி
- ஒரே பாஷை - அதுவே இதய பாஷை
- ஒரே கடவுள் - அவர் எங்கும் நிறைந்தவர்

## சிறப்புப் பெயர்கள்

- தமிழ் - பக்தி மொழி
- உருது - கவிதை
- இத்தாலி - இசை மொழி
- ஆங்கிலம் - வணிக மொழி
- பிரெஞ்ச் - காதல் மொழி
- கிரேக்கம் - சட்டமொழி

## இருக்க வேண்டியவை

- நீதி உள்ளவனுக்கு நீதி இருக்க வேண்டும்.
- தனம் உள்ளவனுக்கு தானம் இருக்க வேண்டும்.
- மனம் உள்ளவனுக்கு மானம் இருக்க வேண்டும்.

## தான தருமம்

- தான் உய்ய ஆன்றோர்க்கு தருவது தானம்
- பிறர் உய்ய வறியோர்க்குத் தருவது தருமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி



# நவில்கின்றோம்

எமது அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாக எம்மோடு இனிமையாக வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திய

எமது குடும்பத்தின் குலவிளக்கு


அமரர்

## திருவாட்டி.வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை

அவர்களின்

மரணச் செய்தி கேட்டு உடன் வந்து துயரில் கலந்து கொண்டும், மரணக் கிரியை நிகழ்வின் போது பலவகையிலும் உதவியோர்க்கும், நோயுற்ற வேளையில் வைத்திய உதவி புரிந்த வைத்தியர்களிற்கும், தொலைபேசி, தொலை நகல் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், ஆகியோருக்கும், ஆத்மசாந்திக் கிரியைகளை நிறைவேற்றிய அந்தணப் பெருந்தகைகளிற்கும், மற்றும் இம்மலரை அழகுற வடிவமைத்து தந்த கோண்டாவிலில் அமைந்துள்ள சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தி னருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி



கைதடி தெற்கு,
கைதடி.
11.10.2010

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்

※அப்பாபிள்ளை + ※முத்தாச்சிப்பிள்ளை

↓

※ கைராசிப்பிள்ளை

※ வன்னியசிங்கம்

※ இளையதம்பி

※ சின்னத்தங்கம்

※ அரியகுட்டி

※ தெய்வயானை

※ முருகேசு

ஆறுமுகவடிவேல்
+
யோகேஸ்வரி
↓
செந்தூரன்
சுதர்சனா
+
கிருஷ்டி
↓
யோஸ்னா

ஆறுமுகநாதன்
+
புவனேஸ்வரி
↓
நிரஞ்சனா
சஜந்தன்

ஆறுமுகசுவாமி
+
சற்குனேஸ்வரி
↓
கஜந்தினி
கஜந்தன்

சரஸ்வதிதேவி
+
※நடராசா

நிரோஜினி
+
சிவனேசன்
↓
நிவேதன்
சிவானுஜா
சிவானிகா

பிரதீபன்
+
சௌந்தர்யா
↓
கீர்த்தனன்
ஹரிணி

தவமணி
+
வாமதேவா
↓
இராகுலன்
வைஷ்ணவி

ஆறுமுகசோதி
+
பராசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ம்சவிருட்சம்

*வல்லிபுரம் + *சேதுப்பிள்ளை

↓

*வள்ளிப்பிள்ளை

*முத்துக்குமாரசுவாமி

...வமணி + ...மதேவா ↓ ...ாகுலன் ...ஷ்ணவி

ஆறுமுகசோதி + பராசக்தி

*யோகீஸ்வரி + செல்வராசா

சாந்தினி + பாலராஜேஸ்வரன் ↓ கோபிகன்

ஆறுமுகலிங்கம் + சாந்தினி ↓ அபிதா

ஆறுமுகசீலன் + நிர்மலலவி

பிரதீபன் + சௌந்தர்யா ↓ கீர்த்தனன் ஹரிணி

சுதாஜினி + கவிகாந்தன் ↓ தினேஷா கபிஷா

*பார்த்தீபன்

ராஜினி + சங்கரதாஸ் ↓ ஆர்எழில்

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

சிவரஞ்சனம் ஒவ்செற் பிறின்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். T.P : 021 222 6722
Sivaranjanam
103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org